பக்கங்கள் நான்கு விலை ரூபா/- 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 104 பிரமோதூத மாசி 27 (11-03-1991) திங்கள்

## மடுமாதா அகதி முகாமுக்கு மேலும் மக்கள் தஞ்சம்

மடுமாதா தேவாலய அகதிமுகாமிற்கு பல்வேறு இடங்களிலிருந்து மேலும் அகதிகள் வந்து சேருவதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர். இந்த முகாமை அகற்றுவதற்கு அரசு முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையிலேயே மேலும் அகதிகள் வந்து சேருகின்றனராம். சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தங்கியுள்ள இவ் அகதி முகாமில் மேலதிகமாகவும் அகதிகள் வந்து சேருவதால் இடநெருக்கடி தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை மடு தேவாலய அகதி முகாமைப் பராமரிக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்தானிகராலய உயர் அதிகாரி ஒருவர் அண்மையில் இவ் அகதி முகாமை நேரில் சென்று பார்வையிட்டது தெரிந்ததே. (70)

### செல்வநகர், கரையாய்வழிகுளம் பகுதிகளில்

# புலிகளின் இரு தாக்குதல்கள்

# 15 படையினர் பலி!

### சிப்பாய்கள் 11, ஊர்காவல் படையினர் 4

திருகோணமலையில் இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய இருவேறு தாக்குதல்களில் 15 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 7.30மணியளவில் தோப்பூர் முகாமில் இருந்து செல்வநகருக்கு ரோந்து சென்ற படையினர் மீது புலிகள் பாரிய தாக்குதலை நடாத்தினர். முகாமில் இருந்து 500 யார் தூரத்தில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலில் 7 சிப்பாய்களும் 4 முஸ்லிம் ஊர்காவற்படையினருமாக 11 பேர் கொல்லப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து 303 துப்பாக்கிகள்- 4, ரவைகள் 100, ரி- 81 துப்பாக்கி, ரி-56 II - 4, ரவைக்கூடுகள்- 15, ஏ. கே. எல் எம். ஜி ரம் மகஸின் 4, ஜ. எம் ரவைகள்- 500 என்பன விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டன.

இதேவேளை கிரியாய் பகுதியில் விடுதலைப் புலிகள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம், புளொட் தாக்கியதில் தாண்டிக்குளத்தில் 20 பேர் பலி

தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து அப்பகுதியில் புளொட் குழுவினர் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் அப்பகுதியில் கொழும்பு செல்லக் காத்திருந்த சுமார் 10 பொதுமக்கள் வீதியிலேயே கொல்லப்பட்டனர். தொடர்ந்து இராணுவத்தினரும் நடாத்திய கடும் ஷெல் தாக்குதலினால் சாஸ்திரி கூழாங்குளம், தாண்டிக்குளம் வாழ் பொதுமக்கள் பத்துப் பேர் பலியாகினர். இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதனிடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற மோதலில் காயமடைந்த புளொட் குழுவினர் சிலரை இராணுவத்தினர் ஹெலி மூலம் அநுராதபுரம் கொண்டு சென்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (74)

### கீரிமலையில் ஷெல் வீச்சு

நேற்று காலையில் இருந்து மாலை வரை காங்கேசன் இராணுவ முகாமிலிருந்து கீரிமலைப் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. ஷெல் இங்குள்ள சிராவணைக் காட்டுப் பகுதியில் விழுந்து வெடித்தது. (ப 10)

### வவுனியா சம்பவத்தால் கொழும்பு பயணம் தடை

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவங்களையடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு ஊடாக கொழும்பு செல்லும் போக்குவரத்துச் சேவைகள் நேற்று நடைபெறவில்லை.

இதனால் கொழும்பு செல்ல யாழ் முத்திரைச்சந்தை வந்த பயணிகள் தங்கள் பயணங்களை தொடர முடியாது திரும்பிச்சென்றதை காண முடிந்தது. (33 74)

### வான் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டோர் அதிகம்

கடந்த இரு வாரத்திற்கு முன்னர் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல்களினால் 35 க்கும் மேற்பட்டோர் இறந்ததாகவும், 60 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததாகவும் செஞ்சிலுவைச் சங்கப் புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

இவ் வான் தாக்குதல்களினால் அநேகமானோரின் மனோ நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் சிறுவர்களும், வயது முதிர்ந்தவர்களுமே அதிகமாக இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

### ஆனையிறவு இராணுவம் மீது புலிகள் சினைப்பர் தாக்குதல்

நேற்றுக்காலை 7.45 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து பரந்தன் பக்கமாக காவல் அரண் அமைக்கும்முயற்சியில்இராணுவத்தினர் ஈடுபட்டபோதாவது தலைப் புலிகள் 'சினைப்பர்' தாக்குதல் நடாத்தினர்.

இதன் பின்னர் மீண்டும் 8.45 மணியளவில் அரண் அமைக்க முயற்சித்தபோதும் தாக்குதல் நடாத்தப்பட்டதில் இராணுவம் பின்வாங்கி முகாம் திரும்பியது. (71)

### தபால் சேவையை அரசு மாற்றியமைக்க நடவடிக்கை

பொதுமக்களுக்கு சிறந்த முறையில் தபால் சேவையை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சின் செயலாளர் அசோகா குணசேகரா தெரிவித்தார்.

முன்னொரு காலத்தில் தபால் அதிபர்களுக்கும், ஊழியர்களுக்கும் பொதுமக்களிடையே மதிப்பு இருந்தது. ஆனால் இப்போது அப்படியில்லை என அவர் கவலை தெரிவித்தார். எதிர்காலத்தில்சிறந்த தபால் ஊழியர்களுக்கு விருது வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### தாண்டிக்குள ஷெல் வீச்சில் ஒருவர் பலி; பலர் காயம்

நேற்று முன்தினம் வவுனியா தாண்டிக்குளம் தடை முகாமிலிருந்து நடாத்தப்பட்ட ஷெல் தாக்குதலால் எஸ். ஜோன் (50) எனும் வயோதிபர் கொல்லப்பட்

...டிய சாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் பலரை இராணுவத்தினர் அநுராதபுரம் வைத்திய

### வவுனியாவில் புளொட் ஹர்த்தால் லொறிகள் செல்லத் தடை

நேற்று வவுனியா ஊடாகச் செல்வதற்கு 100 லொறிகளிற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினர்.

ஆனால் வவுனியாவிற்கு அப்பால் செல்வதற்கு

தடை விதித்ததாகவும் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 புளொட் இயக்கத்தினருக்காக ஹர்த்தால் அனுஷ்டிப்பதாகவும்

### ஐந்து வருட சம்பளத்தை அரச ஊழியர் கடனாக பெறலாம்

அரசாங்க ஊழியர்களுக்கான ... இதன்படி, துயர்துடைப்பு,

னியா தாண்டிக்குளம் தடை முகாமிலிருந்து நடாத்தப் பட்ட ஷெல் தாக்குதலால் எஸ். ஜோன் (50) எனும் வயோதிபர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

இவர் கிளிநொச்சி வைத் பட்டு அங்கு இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் பலரை இராணுவத்தினர் அனுராதபுரம் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (70)

செல்வதற்கு 100 லொறி களிற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினர்.

ஆனால் வவுனியாவிற்கு அப்பால் செல்வதற்கு புளொட் இயக்கத்தினர் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 புளொட் இயக்கத்தினருக்காக ஹர்த்தால் அனுஷ்டிப்பதாகவும் தெரிவித்தனராம். (71)

## மனித உரிமை ஆணைக் குழு இலங்கை வர ஏற்பாடு

நாட்டின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாக ஆராய சர்வதேச மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த இரு குழுவினர் இவ்வாண்டில் இலங்கை வரவுள்ளனர்.

அநேகமாக எதிர்வரும் ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, மாதங்களில் இவர்கள் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிராகப் பேசப்பட்டதை அடுத்தே இவர்கள் இங்கு வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### வடபகுதி முகாமுக்கு

## இடமாற்றம் பெற்ற சிப்பாய் தலைமறைவாகியுள்ளார்

வடபகுதிக்கு இடமாற்றம் பெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் தனது மரண அறிவித்தலை துண்டுப் பிரசுரமாக வீதிகளில் ஒட்டிவிட்டு தலைமறைவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் அண்மையில் தென் பகுதியிலுள்ள வியாங்கொட எனும் இடத்தில் நடைபெற்றது.

பிரஸ்தாப சிப்பாயைத் தேடி பொலிசார் தற்போது வலை விரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (71)

### முன்னாள் பிரதமர் சொல்கிறார்

## மாநில அரசுகளை மத்திய அரசு கலைக்கும் சட்டம் நீக்கப்படும்

மாநில அரசுகளைக்கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு வழங்கும் இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவைத் தான் பதவிக்கு வந்தால் நீக்கிவிடுவேன் என்று கூறியுள்ளார் வி. பி. சிங்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனதாதள் மீண்டும் பதவிக்கு வர நேர்ந்தால் மாநில அரசுகளுக்கு மரியாதை வழங்கும் முகமாக இச் சாசனப் பிரிவை நீக்குவதே முக்கிய கடமையாக இருக்கும் என சேலத்தில் கூட்டம் ஒன்றில் பேசிய வி.பி. சிங் குறிப்பிட்டார்.

## வேலணையில் மருந்துகள் இன்றி காயமடைந்தவர்கள் பாதிப்பு

வேலணையில் இயங்கும் ஊர்காவற்றுறை வைத்திய சாலைக்கு போதியளவு அத்தியாவசிய மருந்து வகைகள் இன்மையால் இராணுவத் தாக்குதல்களினால் காயமடையும் நோயாளிகளுக்கு உடனடிச் சிகிச்சை அளிக்க முடியாதுள்ளதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களை உடனடியாக யாழ் போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வருவதற்கு/போக்கு வரத்து வசதியும் சீரற்று இருப்பதால் நோயாளிகள் பல துன்பங்களை நோக்க வேண்டியுள்ளதுடன் மரணத்தை தழுவக் கூடிய நிலையும் தோன்றியுள்ளது. (ப-11)

## ஐந்து வருட சம்பளத்தை அரச ஊழியர் கடனாக பெறலாம்

அரசாங்க ஊழியர்களுக்கான கடன் வழங்கும் நடைமுறைகளை பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு இலகுவாக்கியுள்ளது.

இது தொடர்பான 6/91 ஆம் இலக்க சுற்று நிருபம் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.

இதன்படி துயர்துடைப்பு, வீடமைப்பு வாகனக் கொள்வனவு கட்டிட நிர்மாணம் போன்ற தேவைகளுக்கு அரச ஊழியர்கள் ஐந்து வருட சம்பளத்தை கடனாகப் பெறலாம்.

முன்னர் இதற்கு இரண்டு

—04 ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன் சாரணர் கிளைக்கு கல்விப்பணிப்பாளர் அன்பளிப்பு

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்திற்கு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்வதாக வாக்குறுதியளித்துள்ளார்.

இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று நடைபெற்ற மேற்படி சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இக் கூட்டத்தில் பிரதம

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஜே. வி. பியின் தாக்குதல்கள் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை

அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் கொலையை அடுத்து ஜே. வி. பியின் இராணுவப் பிரிவான 'தேசப் பிரேமி ஜனதா வியாபாரய, என்ற தடை செய்யப்பட்ட இயக்கத்தினர் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த இயக்கம் ஒடுக்கப்பட்

—04 ஆம் பக்கம் பார்க்க

# 'ரஞ்சன் கொலை; பொலிஸ் விசாரணை முன்னேற்றமில்லை நடுநிலை விசாரணைக் கமிஷன் தேவை' - எதிர்க்கட்சிகள்

தெற்கில் ஜே. வி. பிக்கு எதிரான அரசின் கடும் நடவடிக்கைகளால் கொல்லப்பட்ட, மற்றும் காணாமற் போனோரின் மனைவியராலும், அன்னையராலும் உருவாக்கப்பட்ட அன்னையர் முன்னணிக்கு ஆதரவளித்து அரசுக்குத் தலையிடி கொடுத்து வரும் சுதந்திரக்கட்சி, இப்போது ரஞ்சன் விஜேரத்னாவின் கொலைச் சம்பவத்தைத் தனக்குச் சாதகமாக்கி எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசுக்குப் புதிய நெருக்குதலைக் கொடுக்க முனைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஞ்சன் கொலை தொடர்பாக நடுநிலையான விசாரணை ஒன்றினை நடாத்த வேண்டும் என்று சுதந்திரக்கட்சி உட்படச் சகல எதிர்க்கட்சிகளும் அரசை வற்புறுத்தியுள்ளன என்று நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

பொலிஸ் புலன்விசாரணையில் எந்த ஒரு விளைவும் ஏற்படாததால் நடுநிலை விசாரணை தேவை என இக்கட்சிகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் இச்செய்திகள் மேலும் தெரிவித்தன. (66)

## தமிழ்த்தின விழா போட்டிகள்

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி மட்டத்தில் நடாத்தப்படும் தமிழ் தின விழா போட்டிகள் இம்மாதம் 16ஆம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ் தினப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற நிகழ்ச்சிகள் இந்த இறுதிப் போட்டியில் இடம்பெறவுள்ளன (13)

## ஜெனரல் திருடிய கார் ரோமாபுரியில் மீட்கப்பட்டது

குவைத்தில் ஈராக்கிய ஜெனரல் ஒருவரினால் திருடப்பட்ட கார் ஒன்று ரோமாபுரியில் காணப்பட்டது. இரண்டு ஆசனங்களைக் கொண்ட இந்த 'ஸ்போர்ட்ஸ்' கார் பின்பு கைப்பற்றப்பட்டது குவைத்தில் கார் விற்பனை நிறுவனம் ஒன்றிலிருந்த மிக வேகமான கார்கள் ஈராக்கியத் துருப்புக்களினால் திருடப்பட்டதாகவும் சர்வதேசப் பொலிசாரிடம் (இன்டர்போல்) தெரிவிக்கப்பட்டது.

## வவுனியாவில் தரகர் அடித்துக் கொலை

நள்ளிரவு வேளை வவுனியா கந்தசுவாமி கோவில் ஆலை முன்பு ஒருவர் பொல்லால் அடித்து கொலைப்பட்டுள்ளார்.

ஆசைப்பிள்ளையார் குளம் வாசியான வியாபாரத் தரகர் பஞ்சன் என அழைக்கப்படும் பஞ்சலிங்கமே (வயது 53) கொலை செய்யப்பட்டவர் என தெரியவந்துள்ளது. (11)

## பருத்தித்துறை துறைமுகத்தில் மேலும் அபிவிருத்தி வேலைகள்

பருத்தித்துறை துறைமுகத்தை மேலும் 60 அடி விஸ்தரிக்க புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு 11 லட்சத்து 89 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

ஏற்கனவே 60 அடி விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அமைச்சு வழங்கும் இந்த நிதியின் மூலம் இரண்டு கட்டங்களாக வேலைகளை மேற்கொள்ள யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது (66)

## தற்கொலை

நேற்று முன்தினம் சில்லாலையைச் சேர்ந்த ஜே மரியதாஸ் (35) என்பவர் தற்கொலை செய்துகொண்டார்.

மனநோயாளியான இவர் அளவுக்கதிகமாக மருந்துக் குளிகைகளை உட்கொண்டே மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பணம்பொருள் உற்பத்தியில் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு

பூநகரிப் பகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தினர் பனம் பொருள் உற்பத்தியை அதிகரிக்கு முகமாக இப்பகுதி கிராமப் புறப் பெண்களை இந்த உற்பத்தியில் ஈடுபடுத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமங்கள் தோறும் பெண்கள் அணி ஒன்றை அமைத்து அவர்களுக்கு பண உதவி செய்து இவ்வுற்பத்தியில் ஈடுபடச் செய்து அவர்களது உற்பத்திப் பொருட்களை இவர்களே நியாய விலையில் கொள்வனவு செய்து பனம் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

இத் திட்டத்தில் முதல் கட்டமாக கௌதாரிமுனை எனும் கிராமத்தில் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை மேலும் விஸ்தரிக்கு முகமாக நாச்சிக்குடாச் சந்தியில் இச் சங்கத்தின் கிளை ஒன்றையும் திறவி உள்ளனர். (ப-32)

## எது முதலில் எழுதப்பட்டது? திருக்கோவையாரா, திருவாசகமா?

மாணிக்க வாசகர் திருக்கோவையை எழுதிய பின்னர் தான் திருவாசகத்தை எழுதினார் என்பது பெருஞ்சொல் விளக்க சரவண முதலியார் என்ற தமிழறிஞரின் ஆய்வின் முடிவு. பின்னர் அக் கருத்துத் தவறானது என்று நிரூபிக்கப்பட்டது. திருக்கோவையார் எழுதிய காலம் மாணிக்கவாசகர் முதிர்ந்த நிலையை அடையாத காலம் நன்கு முதிர்ந்து பக்குவம் அடைந்த பின்னர் அவர் எழுதியதே திருவாசகம் எனவே திருக்கோவையார் திருவாசகத்துக்கு முன்னரே எழுதப்பட்டது என்று முடிவாக நிரூபித்தவர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்.

ரஞ்சன் கொலை; பொலிஸார் கருத்து

## 'தொலைவிலிருந்து குண்டைக் கொண்டு வந்திருக்க முடியாது'

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டு, சம்பவம் நடைபெற்ற ஹவ்லொக் வீதியைச் சுற்றியுள்ள சுமார் ஒருமைல் சுற்றுப் பகுதியிலேயே தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சக்திமிக்க இப்பாரிய குண்டை தூர இடத்திலிருந்து சம்பவம் நடைபெற்ற பகுதிக்குக் கொண்டு வந்திருக்க முடியாது என்றும் பொலிஸார் கூறினர்.

## சிறு விளம்பரம்


### புத்தகம்

இதுதான் முடிவு (சமூக நாடகம்) இலங்கைக் கலைக்கழகப் பரிசு பெற்றது. ஆக்கியோன் நாகலிங்கம் இராசரத்தினம் B.A. விலை ரூபா 25/- விற்பனையாளர்: பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 03027

### விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலுள்ள கட்டைப்பிராய் பகுதியில் 10 பரப்புக் காணியும், நல்லூர் செல்லர் வீதியில் வீடு கட்டக் கூடிய 4½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. லேத் மிசின்கள், தகடு வெட்டும் கட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு: பரஞ்சோதி தாபனம், முத்திரைச்சந்தை, நல்லூர். 03036

### தேவை

துப்புரவான வெற்று அரைப்போத்தல்கள் மிகைவைற் யாழ்ப்பாணம். 03054


## பாடசாலை இடமாற்றம்

இயக்கச்சி மகா வித்தியாலயம் முகாவில் பாடசாலையில் தற்போது இயங்கி வருகின்றது.

விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலினாலும் ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்படும் ஷெல் தாக்குதலினாலும் இப்பாடசாலை பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலைக்கு மாணவர்கள் வருவதற்கு அச்சம் தெரிவித்ததனாலேயே மேற்படி பாடசாலை முகாவில் பாடசாலையில் இயங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வேலணை வைத்தியசாலை செயலற்ற நிலையில் உள்ளது

வேலணை பிரதேச சபைப் புங்குடுதீவு உப அலுவலகத்தில் இயங்கி வந்த அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் கடமையில் ஈடுபட்டு வந்த ஊழியர்கள் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து அந்த இடத்திற்கு புதிய ஊழியர்கள் நியமனம் செய்யப்படாத காரணத்தாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இந்த நிலையால் இப்பகுதிகளிலுள்ள வறிய மக்கள் வைத்திய தேவைகளை பெற முடியாது பெரும் அவஸ்தைப்பட்டு வருகின்றார்கள். (20)

## உலர் உணவு விநியோகம்

கலைஞர் கண்டனம்

## தொலைக்காட்சி, வானொலி தி.மு.க. வுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரம்

"தொலைக்காட்சியும், வானொலியும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராகப் பொய்ப் பிரசாரம் நடத்தி வருகிறது. இதற்கு முற்றுப் புள்ளி வைக்காவிட்டால் இதற்கெதிராகப் பெரும் போராட்டம் ஒன்றினை நடத்துவது பற்றிப் பொதுக் குழு முடிவு செய்யும்."

மேற்கண்டவாறு தி.மு.க. தலைவர் கலைஞர் மு கருணாநிதி சென்னையில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

புங்குடுதீவு வைத்தியசாலையில்

## அம்புலன்ஸ் இருந்தும் பயனில்லை என அதிருப்தி

புங்குடுதீவு அரசினர் வைத் நிலையில் உள்ளநோயாளரை

போல் ஓய்வு பெற்றுள்ளதை அடுத்து அந்த இடத்திற்கு ... நியமிக்கப்பட்டு வருகின்றார்கள். (20)

## உலர் உணவு விநியோகம் 'லங்காசிறி' வந்ததும் ஆரம்பம்

ஆறாம் கட்ட உலர் உணவு நிவாரணம்பருத்தித்துறைக்கு வரும் 'லங்கா சிறி' கப்பலின் உணவுப் பொருள்களைக் கொண்டே விநியோகிக்கப் படும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

களஞ்சியங்களில் தற்போ துள்ள உணவுப் பொருள் களையும், கப்பலில் வரும் பொருள்களையும் சேர்த்து ஆறாம் கட்ட விநியோ கத்தை சகலருக்கும் (இலவ சம் உட்பட) வழங்க முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட் டனர். (66)

## பல்கலைக்கழக ஏற்பாட்டில் பேராதனையில் ஆசிரியர் கருத்தரங்கு

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றை உயர் வகுப்புகளில் போதிக் கின்ற ஆசிரியர்களுக்கு உத வும் பொருட்டு முதல் முறை யாக ஓர் கருத்தரங்கு கண்டி மாவட்டத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி நடத்தப்படவுள் ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை இதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

பேராசிரியர் சந்திரசேக ரன் முதலானோர் ஆய்வுக் கட்டுரைகளைக் கருத்தரங் கில் வழங்குவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (23)

## அம்புலன்ஸ் இருந்தும் பயனில்லை என அதிருப்தி

புங்குடுதீவு அரசினர் வைத் திய சாலையில் உள்ள அம் புலன்ஸுக்கு எரிபொருள் இல்லாததால் அது சேவையில் மேற்கொள்ள முடியாது மூலையில் முடங்கியுள்ளது.

மேற்படி இவ் வைத்திய சாலையில் இருந்து ஆபத்தான நிலையில் உள்ள நோயாளரை யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்வ தென்றால் நோயாளரின் உற வினர்கள் தான் ஏழு லீற்றர் டீசலை வழங்க வேண்டுமென கட்டாயப்படுத்தப் படுகின் றார்கள். (20)

## 250 மாணவர்க்கு ஆசிரியர் இருவரே அல்வாய் பாடசாலையின் அவல நிலை

இருநூற்று ஐம்பது மாண வர்களை இரு ஆசிரியர்கள் வழி நடத்துகின்றார்கள்.

அல்வாய் மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை இயங்கும் பாட சாலையில் இருநூற்றுஐம்பது மாணவர் வரையில் கல்வி கற் கின்றார்கள்.

ஆனால் இரு ஆசிரியர்கள், அதிபர், உதவி ஆசிரியர் ஆகி யோரே பெரும் கஷ்டத்துடன் கல்வியூட்டி வருகின்றார்கள். இதை யாழ் கல்வித் திணைக் களம் கவனித்ததாகத் தெரிய வில்லை என விசனம் தெரி விக்கப்படுகிறது. (39)

## பள்ளத்தாக்கில் பாய்ந்த பஸ் 50 க்கும் மேலானோர் பலி

காஷ்மீர் பள்ளத்தாக்கில் பிரயாணிகள் பஸ் ஒன்று கவிழ்ந்ததில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிரயாணிகள் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமுற்றனர்.

சிம்லாவுக்கு அருகில் இவ் விபத்து நிகழ்ந்ததாக யு. என். ஐ. செய்தி ஸ்தாபனம் நேற் றுத் தெரிவித்தது.

### கோரிக்கை

யாழ் பல்கலைக் கழக மறு மலர்ச்சிக் கழகத்தின் நூல் நிலைய விஸ்தரிப்பின் பொருட்டு அரசியல், பொரு ளாதார, சமூக, இலக்கியம் தொடர்பான நூல்களை யாழ் பல்கலைக் கழக மறு மலர்ச்சிக் கழகத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னதாக தந்து தவுமாறு தலைவர் திரு. சத்தியேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

... தெரிவித்ததனாலேயே மேற் படி பாடசாலை முகாமில் பாடசாலையில் இயங்கிவருவ தாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (43)


### தேவை

அப்புரவான வெற்று அரைப்போத்தல்கள் மிக்க வைத் யாழ்ப்பாணம்.

03054


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வரலாறு

எமது கல்லூரியின் வரலாற்றினை ஆராய்ந்து தீர் மானிப்பதற்கு யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் எஸ். பத்மநாதன் அவர்களின் தலைமையில் அறிஞர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவினர் இம்மாத இறுதியளவில் யாழ் பல்கலைக் கழக வரலாற்றுத்துறை அலுவலகத்தில் இந்துக்கல்லூரி யின் வரலாறு சம்பந்தமான கருத்துகளையும் ஆலோ சனைகளையும் கூறவிரும்புவோரைச் சந்திக்கவுள் ளனர். இக்குழுவினர் தமது ஆராய்ச்சிகளை மேற் கொள்ள, இந்நூலுடன் சம்பந்தப்பட்டவர்களின் கருத் துகளும் ஆலோசனைகளும் பெரும் உதவியாக இருக்கும். ஆகவே இவ்விடயத்தில் ஆர்வம் கொண் டோர் தயவுசெய்து இன்றிலிருந்து இரண்டுவார காலத்திற்குள் எழுத்துமூலம் திரு. சுந்தரம் டிவகலாலா (செயலாளர், பழைய மாணவர் சங்கம்) அவர்களுடன் கல்லூரியில் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| சுந்தரம் டிவகலாலா | க. சி. குகதாசன் |
| செயலாளர் | நூற்றாண்டுவிழாக் |
| யாழ் இ. க. பழையமாணவர் | குழுத்தலைவரும் |
| சங்கமும் மேற்படி குழுவும் | அதிபரும் |
| 03052 | யா. இ. க. |

## யாழ் மாவட்டப் பொறுப்பாளர் நிஷாந்தினி அறைகூவல்

# சமைப்பதுதான் தம் உலகம் என்ற நிலையை மாற்றி மாதர் வீறு கொண்டு எழ வேண்டும்

"அடுப்படியில் அகப்பையைப் பிடித்து அடிமையாய் இருப்பதைவிட்டு பெண் அடிமை விலங்கினை ஒடித்து ஆயுதம் பிடித்து போர்க்களத்தில் குதிக்காத வரை வீர சுதந்திரம் பெறமுடியாது"

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் நிஷாந்தினி கூறினார்.

இக்கம் சிவானந்தா விளையாட்டரங்கில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் பேசும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் "சமூகத்தில் பெண்கள் ஓர் அடிமையினம் என்ற எண்ணம் மாற்றப்பட வேண்டும். இதை மகளிர் ஆகிய நாம் தான் மாற்ற வேண்டும்.

இதற்கமைய நாம் சமைப்பது தான் உலகம் என்ற எண்ணமும் பிள்ளை பெறுவது தான் எமது பணியென்ற நிலையும் ஆண் இனத்திற்கு நாம் அடிமையாக தலை குனிவது தான் மரபு என்ற பாரம்பரிய முறைகளை தூக்கி எறிந்து விட்டு நாமும் மனிதசமுதாயம் தான் எமக்கும் சுதந்திரதாகம் உண்டு என்பதை நிரூபிக்க வேண்டும்.

ஆணுக்குப் பெண் தாழ்வு என்று கருதும் இரவு உலகத்தை விட்டு பெண்கள் ஆயுதம் ஏந்தி உரிமைப் போரில் குதித்து பெண்ணின் சுதந்திரத்தையும் அவள் ஆணுக்குச் சளைத்தவள் அல்ல என்பதையும் நிரூபித்துக்காட்ட வேண்டும். இதுவே சர்வதேச மகளிர் தினத்தில் நாம் எடுக்கும் சத்தியமாகும்" என்றும் தெரிவித்தார்.

வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் நகுலேஸ் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் மாலினி, அரசண்ணா, நெல்லியடி மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் குணபால் ஆகியோரும் உரையாற்றினர். (39)

## பனை ஓலை விசிறி மகிமை

தற்போது மிகக் கடுமையான வெப்பக்காலம் அல்லவா? வெப்பத்தைப் போக்க மாத்திரமா பனையோலை விசிறி பயன்படுகிறது? இல்லை, அதன் மேலதிக மகத்துவம் பற்றிய தகவல் இது; பனையோலை விசிறியால் விசிறிக் கொண்டால் வாததோஷம், சிலேஷ்பரோகம், பித்தாதிக்கம் ஆகியன நீங்கும். மயிலிறகினால் செய்த விசிறிக்குத் தலைச் சுற்றல், பித்த கோபம், திக்கல் இவற்றை நீக்கும் சக்தி உண்டு. அறிவு பிரகாசிக்கும். ஆதாரம்: 'பதார்த்த குண சிந்தாமணி' எனும் நூல். (16)

## அருட்சகோதரிகளுக்கு வரவேற்பு

புங்குடுதிவு பங்கிற்கு இறை பணியாற்ற வந்துள்ள அருட்சகோதரிகளான சேமன்-யோசப், சாந்தி, டொறின்-பிலிப்பையா, இல்டகாட் ஆகியோருக்கு வரவேற்பு விழாவொன்று புங்கு புனித பிரான்சிஸ்- சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றது.

புங்குடுதீவு அருள் தந்தை யேசுதாசன் (சந்திரன்) அடிகள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வே செபமாலை, அ.ஜெனோவா, றூபி, செபராசஜேர்வரி, றிச்சாட், டொமினிக் உட்படப் பலர் உரையாற்றினார்கள். (20)

## போலி ஆவணங்கள் காரணமாம்

# 6 வடபகுதி வாலிபர்கள் விமான நிலையத்தில் கைது

போலி ஆவணங்களுடன் டென்மார்க் செல்ல முயன்ற ஆறு வடபகுதி வாலிபர்கள் நேற்று முன்தினம் கொழும்பு விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தினையடுத்து இரகசியப் பொலிசாருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டு இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கோப்பாய்ப்பகுதியில் விவசாயிகள் உற்சாகம்

சிறுநிலை விவசாயிகள் உதவித்திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்தியில் கோப்பாய் பகுதி விவசாயிகள் அதிக அக்கறை காட்டிவருகின்றனர்.

இப்பகுதியில் இதுவரை தரிசாகக் காணப்பட்ட பயிர்ச் செய்கை வயல் நிலங்கள் யாவற்றிலும் உள் உணவு தானியங்கள் பயிரிடப்பட்டுள்ளதுடன் விவசாயிகள் மரக்கறிச் செய்கைக்கும் நிலத்தைப் பண்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ இராணுவ உற்பத்திக் குழுவினரும் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (23)

# வைத்தியசாலைகள் இரண்டு நிர்வகிக்கும் டாக்டர் ஒருவர்

வடமராட்சி கிழக்கில் உள்ள இரண்டு வைத்தியசாலைகளை ஒரு வைத்தியரே கவனித்து வருகின்றார். இதன் காரணமாக மருதங்கேணி வைத்தியசாலை திங்கள், வியாழன் ... இல் ஓய்வுபெற்றுச் சென்றதை அடுத்து இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. (43)

## பெர்னாட் ஷாவும் சர்வதும்

# சிக்கனச் சமையல் செய்ய...!

இது போர்க்காலம். உணவுப் பண்டங்கள் விலை ஏறிவிட்டன. மின்சாரம் இல்லை. விறகுத் தட்டுப்பாடு இல்லத்தரசிகள் பிரச்சினையை எவ்வாறு சமாளிக்கின்றார்கள்? சமையலில் சிக்கனத்தைப்பேணுவது எப்படி? மனைப்பொருளியல் விரிவுரையாளராகவும், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபராகவும் விளங்கி அண்மையில் ஓய்வு பெற்ற செல்விச. சின்னப்பு அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் இவை.

கேள்வி: தேங்காய்த் தட்டுப்பாட்டினால் பெண்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்களே, இதற்கு மாற்று வழி உண்டா?

பதில்: தென் இந்தியாவிலும், சிங்கள நாட்டிலும் தேங்காய் அதிகம் பாவிப்பதில்லை. இங்கு பழகிவிட்டது. இயன்ற அளவு குறைத்துப் பாவிக்க வேண்டும் மரக்கறிகளை தேங்காய்ப்பாலில் வேக வைக்காது தண்ணீரில் வேக வைத்துப் பின்பு கொஞ்சமாகப் பால் விடலாம்.

அசைவ உணவிற்கும் இம்முறை பொருந்தும். தேங்காய்ப்பாலுக்குப் பதில் தேங்காயை அரைத்துப் பாவிக்கும் போது கறி தடிக்கும். தேங்காய் விரயமும் இருக்காது. தேங்காய்ப்பாலும், தேங்காய் எண்ணெயும் உடலுக்குக் கெடுதியானவை. இரண்டுமே இருதய நோய்க்கு வழிவகுப்பவை.

கே: மரக்கறிச் சமையலில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் வழி என்ன?

ப: குறைந்த விலையில் சத்துள்ள மரக்கறி இருக்கும் போது பலர் விலைகூடிய உருளைக்கிழங்கு, கோவா, முதலியவற்றை வாங்குகிறார்கள். கீரை, பொன்னாங்காணி, வல்லாரை, தவசி முருங்கை, அகத்தி இலை ஆகியன சத்து மிகுந்தவை. அதேநேரம் மலிவானவை. வல்லாரையும், முளைக் கீரையும் உடலுக்கு மிகவும் நல்லவை. தினசரி ஏதாவது இலைவகை சமைத்தல் வேண்டும். வாழைக்காயின் தோலை எல்லோரும் எறிகிறார்கள். தோலில் வறை சம்பல் முதலியன தயாரிக்கலாம். அது போஷாக்குச் சத்துக் கொண்டது. உருளைக்கிழங்கு விலை கூடியது. ஆனால் அதில் மாச்சத்துத்தான் அதிகம். இதற்குப்பதில் மரவள்ளி, மோதகவள்ளி, அருணைக் கிழங்கு ஆகியவற்றைப்பாவிக்கலாம்.

கே: தற்போதைய சூழ்நிலையில் அரிசிச் சோற்றுக்கு மாற்றீடாக எதைக் குறிப்பிடலாம்?

ப: நம் முன்னோர்கள் குரக்கன், சாமை, வரகு போன்றவற்றை உபயோகித்தார்கள். அந்தக் காலத்தில் கூழ் ஒரு ...

... திருத்தல் வேண்டும். அதன் பின்பே அடுப்பை மூட்ட வேண்டும். சமையலை ஆரம்பித்தால் பிறகு தாமதம் இருக்காது அடுப்பு எரிகின்ற நேரம் குறையும். இந்தியாவில் சில மாநிலங்களில் அன்றைய சமையலுக்குரிய எல்லா மரக்கறிகளையும் நறுக்கி ஆவியில் வேகப் (Steam) பண்ணுவார்கள். பின்பு தனித்தனியாகச் சமைப்பார்கள். எல்லாவற்றையும் ஒரே நேரமும் ஸ்ரீம் பண்ணுவதால், எரிபொருள் மிச்சமாகிறது.

கே: தேங்காய்ப் பூவைப் பிழிந்து பால் எடுத்த பின். பிழிந்த பூ வீசப்படுகிறது, அதனைப் பாவிக்க முடியாதா

ப: நன்றாகப் பாவிக்கலாம். பிழிந்த தேங்காய்ப் பூவை இலேசாக வறுத்து வைத்தால் பழுதடையாது. வறுக்கும் போது; பூ இளம்பு நிறமாக மாறுவதற்கு முன் இறக்க வேண்டும். இப்படி வறுக்கப்பட்ட பூவில் சம்பல் செய்யலாம், சட்னி செய்யலாம். உடம்புக்குக் கெடுதல் இல்லை.

கே: கோதுமை மாவிற்கு இப்போது தட்டுப்பாடு நிலவு கிறதே. அதற்குப் பதில்.....

ப: குரக்கன் மா, மரவள்ளி மா, ஒடியல் மா போன்றவை பாவிக்கலாம். மரவள்ளிக் கிழங்கைச் சீவிக்காயவைத்து, இடித்து மாவாக்கி, கோதுமை மாப்போல் அவித்துப் பிட்டுத் தயாரிக்கலாம். இதேபோல ஒடியல் மாவிலும் பிட்டுத் தயாரிக்கலாம். மரக்கறி வகைகளை நறுக்கி ஒடியல் மாவுடன் கலந்து உப்புச் சேர்த்துப் பிட்டாகக் குழைத்து நீத்துப்பெட்டியில் போட்டு அவிக்க வேண்டும். இஞ்சுட்டுடன் கறியோடு சாப்பிடச் சுவையாக இருக்கும்.

## பேட்டி கண்டவர்: வி.பி.

கே: காலை ஆகாரத்திற்குச் சிக்கனமானதும், சுலபமாகத் தயாரிக்கக் கூடியதுமான உணவு வகை எது?

ப: பல இருக்கின்றன. கௌபி, பயறு போன்றவற்றை அவித்துச் சாப்பிடலாம். இரண்டுமே புரதச் சத்து உள்ளவை. உழுந்து மலிவான உணவு மட்டுமின்றி புரதச்சத்தும் மிகுந்தது.

... அடைத்து வைத்திருப்பது நல்லது.

★ வெங்காயம் பழுதாகாமல் இருக்க அதனை ஒரு வலைப்பையில் போட்டுத் தொங்க விடலாம்.

★ கீரைவகை, கறுவேப்பிலை ஆகியன ஒரிருதினங்கள் வாடாமல் இருப்பதற்கு ஈரத்துணியில், அல்லது வாழையிலையில் சுற்றி வைக்கவும்.

★ முதல் நாள் வாங்கிய பாணில் மிகுதியிருப்பின், துண்டுகளாக வெட்டி. ஆவியில் வைத்து அவித்து எடுத்தால் புதிய பாண் போல் இருக்கும்.

★ கிழங்கு வகைகளை முடியும் இலைவகைகளைத் திறந்தும் அவியவிடுதல் வேண்டும். (மரவள்ளி இதற்கு விதிவிலக்கு)

இலை வகைகளை மூடி அவியவிட்டால் அவற்றிற்குரிய பச்சை நிறம் மாறிவிடும்.

★ கிழங்கு வகைகளை முழுவதாக வேக விடுவதற்கு முன்னர் அவற்றை நன்றாகக் கழுவுதல் வேண்டும்.

★ மரக்கறி வகைகள் பகமாக வெந்த பின்னரே புளியை விடுதல் வேண்டும். சில மரக்கறி வகை புளி நீரில் அவியாமல் 'தேறிக்கொள்ளும்.

★ பருப்புவகை அவியாதே எடுத்தால் அப்பச்சோடாவைச் சேர்க்கலாம்.

★ கறிவகை குழம்பு முதலியன தடிப்பதற்கு இறுதி பொரிஅரிசிமா அல்லது பயிற்றம்மாவைத் தூவிக் கொள்ளலாம்.

★ அடைத்து வைக்க வேண்டிய பொரியல் வகைகள் ஆறி இருத்தல் வேண்டும். இல்லாவிடில் பழுதடைந்து விடும். இளகியும் போகும்.

★ பனாட்டுத் துண்டுகளைத் தேங்காய்ப் பாலில் ஊற வைத்துக் கரைத்து, மா, சீனி முதலியவற்றைப் போட்டுக் குழைத்து பனங்காய்ப் பலகாரம் சுட்டுக் கொள்ளலாம்.

★ சமையலறை ஒப்பரவாக இருத்தல் வேண்டும். தேவையற்ற தகரங்கள், போத்தல்கள், பாத்திரங்கள், கடதாசி ஆகியவற்றைச் சமையலறையில் ...

மாக மருதங்கேணி வைத்திய சாலை திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் மூடப்பட்டுள்ளது.

இதேபோன்று முள்ளியான் வைத்தியசாலையும் வாரத்தில் ஐந்து நாட்கள் மூடப்படுகின்றது. இதன் காரணமாக இப்பகுதி நோயாளர்கள் பெரிதும் கஷ்டத்திற்கு உள்ளாகி வருகின்றார்கள்.

வடமராட்சி கிழக்கில் பிரதான வைத்தியசாலையாக விளங்கும் மருதங்கேணி வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்கும்படி இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

ஏற்கனவே இவ்வைத்திய சாலையில் கடமையாற்றிய வைத்திய அதிகாரி அண்மை

## சிவராத்திரி விழா

கோப்பாய்ப் பகுதியில் எதிர்வரும் வியாழக்கிழமை கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சிவராத்திரிவிழா விசேட பூஜைகளுடன் விமரிசையாக நடைபெறவுள்ளது. ஏனைய ஆலயங்களில் கடந்தமாதம் சிவராத்திரி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (28)

## பேர்னாட்ஷாவும் சர்வரும்

பேரறிஞர் பேர்னாட்ஷா ஒரு முறை ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனார். மறதியாக மூக்குக்கண்ணாடியை விட்டுவந்ததால் மெனுகார்ட்டை (உணவுப்பதார்த்தப்பட்டியலைப்) படிக்கமுடியவில்லை வேறு வழியில்லாமல் சர்வரைக் கூப்பிட்டுப் படித்துக் காட்டச் சொன்னார். சர்வர் கூசிக் குறுகி, தலையைச் சொறிந்து கொண்டு சொன்னார். 'நானும் உங்களைப் போல் எழுதப் படிக்கத் தெரியாதவன் ஐயா'.

(16)

## அரசின் ஓரவஞ்சனை; சிங்கள முஸ்லிம் கலைஞர்க்கே கௌரவம்

அரசு தமிழ்க் கலைஞர்களைப் புறக்கணிப்பது தொடர் நிகழ்வாகவேஇருந்து வருகின்றது என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சினால் இவ்வருடம் கௌரவிக்கப்படவிருக்கும் 28 முஸ்லிம் கலைஞர்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளதாகவும் அடுத்து வரும் வருடங்களிலும் இவ்வாறே முஸ்லிம் கலைஞர்கள் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்படுவர். என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே போன்று சிங்களக் கலைஞர்களும் அரசினால் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். தமிழ்க் கலைஞர் திட்டமிட்டு ஒதுக்கப்படுகின்றார்கள் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

வற்றை உபயோகித்தார்கள். அந்தக் காலத்தில் கூழ் ஒரு நேர உணவாக இருந்தது. அதில் பல மரக்கறி வகைகள் சேருவதால் சத்தும் அதிகம். செலவும் குறைவு,

கே: எரிபொருளில் எப்படிச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம்?

ப: சமையல் செய்வதிலும் ஒரு திட்டம் இருக்க வேண்டும். சமையல் செய்ய முன் மரக்கறி வகைகள் எல்லாவற்றையும் வெட்டித்தயாராக வைத்

மலிவான உணவு மட்டுமின்றி புரதச்சத்தும் மிகுந்தது. உழுத்தங்களி தயாரிக்கலாம். இந்த உணவுவகைகளைச் சிறுபிள்ளைகள் விரும்பி உண்ணுவார்கள்.

கே: உணவுப் பொருட்களைப் பேணிப் பாதுகாப்பது சம்பந்தமாகப் பெண்களுக்கு நீங்கள் சொல்லக்கூடிய குறிப்புகள்-

ப: நிறைய இருக்கின்றன.

★ தூள், பொடி போன்றவற்றைத் தகரங்களிலும் பார்க்கப் போத்தல்களில்

ரங்கள், கடதாசி ஆகியவற்றைச் சமயலறையில் சேர்த்து வைக்கலாகாது.

★ சாப்பாட்டு மேசை, அலுமாரி முதலியவற்றில் எறும்பு ஏறாமல் இருப்பதற்கு D.D.T பவுடரைத் தேங்காயெண்ணெயில் கலந்து ஒவ்வொரு காலுக்கும் தரையில் இருந்து ஒரு அங்குலத்திற்குப் பூசிவிடவும். இப்படி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை செய்யவும்.

## கடமைக்கு உரிய வேளை சமுகமளிக்கும் ஆசிரியர் அரிது

"இன்று பாடசாலைக்கு நேரத்துக்கு வருகின்ற ஆசிரியர்களைக் காண்பது மிகவும் அரிது. ஆனால் நேரத்துக்கு வந்து பணியாற்றிய ஆசிரியர் வரிசையில் உப அதிபர் திருமதி பாலசுப் பிரமணியத்துக்கும் இடமுண்டு"

இவ்வாறு கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் யாழ் நகரத்தினல் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற பிரிவுபசார வைபவத்தில் பேசுகையிற் கூறினார்.

முப்பது வருடங்கள் ஆசிரியையாகப் பணியாற்றி 5 வருடங்கள் உதவி அதிபராகவும் இவர் பணியாற்றினார்.

பழையமாணவர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் ஏற்பாடுசெய்த இவ்வைபவத்துக்கு அதிபர் எம். இராமலிங்கம் தலைமை வகித்தார்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்குத் திருமதி பாலசுப்பிரமணியம் பெரிதும் பாடுபட்டவர் என்று அதிபர் புகழாரம் சூட்டினார். (27)

## விண்ணப்பிக்க முடியாத நிலை

செங்கலடி பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டிருக்கும் பதவி வெற்றிடங்களுக்கு யாழ் பகுதியிலிருந்து உரிய திகதியில் விண்ணப்பங்களை அனுப்ப முடியாத நிலையில் உள்ளதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இம்மாதம் 15 ஆம் திகதியுடன் விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி முடிவடைவதனால் விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பங்களை மேற்படி பல்கலைக் கழகத்திலிருந்து பெற்று உரிய காலத்தில் விண்ணப்பிக்க முடியாதிருப்பதாக சம்பந்தப்பட்டோர் கவலை தெரிவித்துள்ளனர். (38)

## உள்ளூர் உற்பத்தியை ஊக்குவித்த கல்விக்கண்காட்சி

கடந்த மூன்று நாள்களாக யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியை பார்வையிட்டு பலர் பயனடைந்துள்ளதாக கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இக் கண்காட்சியில் உள்ளூர் மூலப் பொருள்களைக் கொண்டு குரக்கன் பிஸ்கட், யோக்கட், பயறு பிஸ்கட், மரக்கறி உற்பத்தி, கட்புல சாதன ஆக்கல், தோற்பொருள் உற்பத்தி, உடை அமைத்தல் என்பன அமைந்திருந்தன.

விவசாய நவீன தொழில் நுணுக்கங்கள், புத்தகங் கட்டுதல், பத்திரிகைச் செய்தி ஆக்கங்கள் போன்ற 20 வகையான சுய தொழில் திட்டங்கள் ஆரம்பித்தல் பற்றிய செய்முறை வழிகாட்டலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நல்லூர் காகித ஆலையின் உற்பத்தி பற்றிய செய்முறை விளக்கமும் காண்பிக்கப்பட்டது.

''தற்போதைய கல்வி முறையில் உள்ள பிரச்சினைகளும், பொருத்தமான தீர்வும்'' எனும் தலைப்பிலான விளக்கங்களும் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன. (70)

## இந்தவருடம் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக

# சகல அரச நிறுவனங்களும் தனியார் மயம்

# நாணயசபைக்கு அரசு பணிந்தது!

சகல அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசசார்பு நிறுவனங்கள் அனைத்தும் தனியார் மயப்படுத்தப்படவுள்ளன.

இவ்வருடம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக இதை அமுல் படுத்துமாறு அரச சுற்றுநிருபம் ஒன்று சகல திணைக்களங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சகல அரச திணைக்களங்களும் தனியார் மயப்படுத்தப்பட்டபின்னர் இவற்றின் பங்குகளின் அறுபது வீதமானவை டெண்டர் மூலமாகவும், முப்பது வீதமான பங்குகள் பொதுமக்களிடமும், பத்து வீதமான பங்குகள் அந் நிறுவனத்தில் பணிபுரியும் நம்பிக்கையான ஊழியருக்கும் பகிர்ந்து வழங்கப்படும் எனவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா அரசின் இப்புதிய நடவடிக்கை சர்வதேச நாணயப் பிரிவிடம் கடன் வாங்குவதற்காகவே எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொழும்பு வந்துள்ள சர்வதேச நாணயப் பிரிவின் பிரதிநிதிகளுக்கும் வர்த்தக கப்பல்துறையமைச்சர் மன்சூருக்கும் கடந்த வெள்ளியன்று நடந்த முக்கிய பேச்சுகளின் பின்னரே ஸ்ரீலங்கா இப்புதிய அறிவிப்பை விடுத்துள்ளது.

அரசின் அறிவிப்புக்கு நாணயசபை பிரதிநிதிகள் திருப்தி தெரிவித்து விட்டதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பருத்தித்துறைக்கு 'லங்காசிறி' வந்தது

'லங்காசிறி' உணவுக் கப்பல் நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் உணவுப் பொருள்கள், தபாற் பொதிகள் ஆகியவை எடுத்து வரப்பட்டன.

மேலும் உடுப்பிட்டி பலநோ கூ. சங்கத்திற்கென அரிசி, சீனி, கற்சரக்கு வகைகள் பிஸ்கட் வகைகள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் ஆகியனவும் வந்துசேர்ந்துள்ளன. (33)

## யாழ் பெரியாஸ்பத்திரியில் இரவுநேரம் மின்சாரம் குறைவு

யாழ் போதனா வைத்தியசாலைக்கு இரவு நேரங்களில் வழங்கப்பட்டு வரும் மின்சாரம் கடந்த சில நாள்களாக குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள டீசல் கையிருப்பு குறைந்து செல்வதே காரணம் என மின்சார வட்டாரங்கள் கூறின.

இம் முறைவரும் லங்காசிறி கப்பலில் டீசல் போதியளவு அனுப்பி வைக்காவிடில் பல பிரச்சினைகளை ஆஸ்பத்திரி நிர்வாகம் பொறுப்பேற்க வேண்டி வரும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப 11)

## பத்திரிகையாளர் பால விவேகானந்தா காலமானார்

பிரபல பத்திரிகையாளரான வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பால விவேகானந்தா கொழும்பில் மாரடைப்பால் கடந்த வெள்ளியன்று காலமாகிவிட்டார். இறக்கும் போது இவருக்கு வயது 52.

ரைம்ஸ் பத்திரிகை நிறுவனம். உபாலி குறூப் ஆகியவற்றில் கடமை புரிந்த இவர் கடந்த 12 வருடங்களாக வீரகேசரியில் பணியாற்றினார்.

செய்தி எழுதுபவராக விளங்கிய இவர் 'நீரிணைக்கு அப்பால்' என்ற செய்திக் கட்டுரை மூலமும் பிரபலமானவர்.

## மாட்டுக் கொழுப்பில் புதிய விளக்கு

மாட்டுக் கொழுப்பை எடுத்து உருக்கி எண்ணெயாக்கி விளக்கு எரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு சுட்டி. மாட்டுக் கொழுப்பு எண்ணெயில் ஐந்து மணிநேரம் விளக்கு எரிக்க முடியும் எனவும் இதனை ஆராய்ந்தவர்கள் தெரிவித்தனர். (66)

# கொழும்பில் கொள்ளை முயற்சி இரு இராணுவத்தினர் கைது

கொழும்பு - கோட்டை ஆஸ்பத்திரி வீதியில் கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட இரு இராணுவச் சிப்பாய்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் திருகோணமலையில் உள்ள முகாம் ஒன்றில் பணிபுரிவதாகவும் விடுமுறையில் வந்தபோது இதில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்பத்திரி வீதியில் உள்ள குதிரைப் பந்தைய புக்கி ஒன்றிற்குள் மாலை நேரம் திடீரெனச் சென்று கொள்ளையடிக்க எத்தனித்தனராம்.

இவ்வாறு செய்யும்போது அப்பகுதியில் நின்றவர்கள் கூக்குரல் எழுப்பவே அவர்கள் தப்பியோட முயன்றபோது வழியில் எதிர்ப்பட்ட பொலிஸ்காரர் ஒருவரையும் ஊர்காவல் படைவீரர் ஒருவரையும் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பலத்த சிரமத்தின் மத்தியில் இவர்கள் இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ரிவோல்வர், கிரனைட் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கு மீண்டும் நிவாரணம்

இந்தியாவில் இருந்து முன்னர் திரும்பிய அகதிகளுக்கு மீண்டும் நிவாரணங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணம் சிலகாலமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இதனை மீண்டும் வழங்க புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதியில் வேலைகள் நடைபெறுகின்றன. (74)

## காங்கேசன்...

விருந்தினராகக் கலந்து கொண்ட அவர் சங்கத்தின் சிறந்த செயற்பாடுகளையும் ஆணையாளர் திரு. போஜனின் திறமைகளையும் வெகுவாகப் பாராட்டினர். (12)

## விரைவில் தேர்தலை நடாத்த குவைத் அரசுக்கு கோரிக்கை

குவைத்தில் விரைவில் பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தலை நடாத்துமாறு பிரிட்டன் கோரிக்கை விடுத்துள்ளது. குவைத்திற்கான பிரிட்டிஷ் தூதுவர் இது தொடர்பாக கருத்து வெளியிட்டபோது, குவைத்தில் தேர்தலை உடனடியாக நடாத்தாவிட்டால் அங்கு பெரும் புரட்சியை தவிர்க்க முடியாது எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை வளைகுடாப் போரில் ஈராக்கிற்கு உதவி புரிந்தமைக்காக பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு எதிர்காலத்தில் அமெரிக்கா எந்தவித உதவியும் வழங்க மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் வடபகுதியில் பெரும்பாலான நகர்களை தாம் கைப்பற்றியுள்ளதாக அப்பகுதி கெரில்லாக்கள் அறிவித்துள்ளனர் ஈராக்கின் வடபகுதியில் சிறுபான்மை இனத்தவரான குர்திஷ் மக்களே அதிகமாக வாழ்வது தெரிந்ததே.

## இடைக்கால பிரதமர் பதவிக்காக

## ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சி காங்கிரஸின் உதவி நாடாது

இடைக்காலப் பிரதமராக சந்திரசேகர் தொடர்ந்து இருப்பதற்காக ஜனதாதள் (எஸ்) ஒருபோதும் இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச் சேராது என கட்சியின் பொதுச் செயலர் ஓம்பிரகாஷ் சௌத்தாலா நேற்றுத் தெரிவித்தார்.

முன்னதாக ஜனதாதள் (எஸ்) கட்சிக்கு இந்திரா காங்கிரஸ் இன்னமும் ஆதரவு வழங்குகிறது என ராஜீவ் காந்தி கூறியதைத் தொடர்ந்து இரு கட்சிகளினதும் ஒரு உடன்பாட்டின் கீழ் சந்திரசேகர் பிரதமராக சிறிது காலத்திற்கு இருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

## புலிகளின்—

நடாத்திய மற்றுமோர் தாக்குதலில் 4 சிப்பாய்கள் பலியாகினர்.

திரியாய் முகாமில் இருந்து திரியாய் சந்திக்கு 35 இராணுவத்தினர் மூன்று பிரிவாக வெவ்வேறு பாதைகளால் ரோந்து வந்தனர். இப்பிரிவுகளில் ஐந்து சிப்பாய்களைக் கொண்ட ஒரு பிரிவை கறையாய்வழிகுளம் பகுதியில் வைத்து விடுதலைப்புலிகள் தாக்கினர். இதில் 4 சிப்பாய்கள் பலியாகினர் ஒருவர் தப்பியோடிவிட்டார்.

இவர்களிடமிருந்து ரி-81 துப்பாக்கி, ரவைக்கூடுகள்- 4, ரி- 56 II துப்பாக்கிகள், ரி-56 I துப்பாக்கி, ரவைக்கூடுகள்- 8, ஏ. கே. எல். எம் ஜி துப்பாக்கி, ரம்மகஸின்- 5, ரவை- 500, கைக்குண்டு ஒன்று, ஐ. எம் ரவைகள்- 890, குண்டு துளைக்காத கவச உடை- 3

## தேசிய வீடமைப்புத் திணைக்களம் இம்மாதத்துடன் மூடப்படும்

தேசிய வீடமைப்புத் திணைக்களம் இம்மாத இறுதியில் மூடப்படவுள்ளதாக வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து இத் திணைக்களத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர்களிடம் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## 1500 மெற்றிக் தொன் உழுந்து

போரில் ஈராக்கிற்கு உதவி

ததே.

## சர்வதேச செஞ்சிலுவைக்கு யாழ்நகரில் கேந்திரநிலையம்

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு யாழ்ப்பாணத்தில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தின் முக்கிய கேந்திர நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து உயர்மட்ட ஆலோசனை நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ப்ிறட் கிறிம் இப்பகுதிகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இவர் மடு உட்பட ஏனைய அகதி முகாம்களையும் பார்வையிட்டார். (74)

## குண்டு வெடிப்பு மரணங்கள் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

கொழும்பு குண்டு வெடிப்பில் மரணமானவர்களின் தொகை 19 பேர் என்றும் 77 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இச் சம்பவத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன, எட்டுப் படையினர், ஆறு பொதுமக்கள் உட்பட 15 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர்.

ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட 81 பேரில் நால்வர் இறந்ததாகவும் அமைச்சு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு 'டச்சு வீதி, லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 11 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வித்துள்ளார்.

இதனையடுத்து இத்திணைக்களத்தை தேசிய வீடமைப்பு அதிகாரசபை பொறுப்பேற்கவுள்ளது.

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் வீடமைப்புக்கடன் பெற்று 31. 12 1989 இல் திருப்பிச் செலுத்தும் காலம் முடிவடையாதவர்கள் தமது தவணைப் பணத்தை ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து பிரசந்திய

வடபகுதி மக்கள்

## 1500 மெற்றிக் தொன் உழுந்து யாழ் குடாநாட்டுக்கு வரும்

வவுனியாவிலிருந்து 1500 மெற்றிக் தொன் உழுந்தை உடனடியாக யாழ் குடாநாட்டிற்குக் கொண்டுவர இங்குள்ள பலநோ.கூ. சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

வவுனியாவில் தற்போது உழுந்து அறுவடை செய்யும் காலமாகையால் இதனைக் கொள்வனவு செய்ய தெல்லிப்பழை, நல்லூர் ஆகிய கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட சில சங்கங்களின் வர்த்தக முகாமையாளர்கள் வவுனியா சென்றுள்ளனர்.

இதேவேளை முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து நெல், அரிசி ஆகியவற்றைக் கொள்வனவு செய்து இங்கு கொண்டு வரும் முயற்சியில் இச்சங்கங்கள் ஈடுபட்டுவருவதாகவும் கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (66)

## புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கமுடியாநிலை

அடையாள அட்டைகளைத் தவறவிட்ட வடபகுதி மக்கள் பொலிஸ் முறைப்பாட்டு பிரதியின்றி புதிய வற்றுக்கு விண்ணப்பிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மாற்று ஏற்பாடாக உதவி அரசாங்க அதிபர்களின் உறுதிப்பத்திரத்தை இணைக்க ஏற்பாடு செய்யுமாறும் ஆட்பதிவுத்திணைக்களத்துக்கு தமிழ் பகுதிகளிலிருந்து கோரிக்கை விடப்பட்டிருந்தது.

ஆனால் இதுவரை இந்த ஏற்பாடு செய்யப்படாததால் புதிய அடையாள அட்டைகளைப் பெறமுடியாத பலர் தமது முக்கிய அலுவல்களைச் செய்ய முடியாது உள்ளனர். (47)

## சு. க. கூட்டணி

சுதந்திரக் கட்சித் தலைமையில் எதிர்க்கட்சிகள் முன்னணியாக நின்று உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

## நாளை கூ. ச. தலைவர் கலந்துரையாடல்

பொருட்கள் விலை நிர்ணயம் சம்பந்தமான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் கலந்துரையாடல் யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் பத்து மணிக்கு திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

500, கைக்குண்டு ஒன்று, ஐ.எம் ரவைகள்- 890, குண்டுத் துளைக்காத கவச உடை- 3 என்பன புலிகளால் மீட்கப்பட்டன. (71)

### ஜே. வி. பி...

டுனை போதும் இதில் இருந்து பிரிந்த சில குழுக்கள் தாக்குதல்களை நடாத்தி குழப்பம் விளைவிக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மையில் மொனறாகல காடுகளில் 18 ஜே. வி. பி. தீவிரவாதிகள் கைதாகியதும் குறிப்பிடத்தக்கது.

இரு வருடங்களாக ஐ.தே.க. ஆதரவாளர்களைக் கொலை செய்த இவர்களின் தலைவர்களை நசுக்குவதில் மறைந்த அமைச்சர் ரஞ்சன் முக்கிய பங்கு வகித்தமையும் குறிப்பிடத்தக்கது.

### ஐந்து வருட...

வருட கடனாக வழங்கப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதற்கு சம்பளத்தில் மாதாந்தம் கழிக்கப்படும் தொகை, வட்டி வீதம் என்பனவும் சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.